بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாலும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரில்

# JAMAAT UL SAHIH AL ISLAM

## METHOD OF INITIATION

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதாவது உண்மையான இஸ்லாம் அமைப்பில் எவ்வாறு உறுப்பினராகலாம்?

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினராக சேர்ந்திட விரும்புகின்ற நபர், அல்லாஹ்வின் கலீ஁பாவும் இந்நூற்றாண்டின் முஜத்தீதும் இறைத் தூதரும் நபியும் ஆகிய ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களிடத்தில் ஒரு தூய உறுதிமொழி செய்ய வேண்டும். நமது அன்புக் குரிய பரிசுத்த நபி முஹம்மது முஸ்தபா (ஸல்)வும், கடந்த நூற்றாண்டின்(14-ம் நூற்றாண்டு) வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ்கும், அஹமதியா ஜமா அத்தின் நிறுவனருமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) முடையவும் போதனைகளைத் தொடர்ந்துப் பிரச்சாரம் செய்வதற்கும் அல்லாஹ்வின் பால் மக்களை அழைப்பதற்குமாக அல்லாஹ் அன்னாரை (ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) ) தேர்ந்தெடுத்திருக்கின்றான் என்று ஒத்துக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் எழுதிய பை-அத் நிபந்தனையின் முதல் ஒன்பது நிபந்தனையும் அவ்வாறே நிலை நிற்பதும் பத்தாவது நிபந்தனையை இப்போதைய நிகழ்வுக்கு ஏற்றவாறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டதும் ஆகும்.

இந்த நூற்றாண்டின் (15-நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) இறைத் தூதரான ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம்(அலை) அவர்களை நேரடியாக சந்திக்க முடியாதவர்கள் இந்த விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்து அனுப்பி வைக்க வேண்டும். இந்த தூய உடன்படிக்கை (பை-அத்) நிபந்தனையை நன்றாக படித்து புரிந்துக் கொண்டு பரிபூரணமாக அதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தின் தலைவரும் இந்த உடன்படிக்கை படிவத்தை நிரப்பி மௌரீஸியஸ் ஜமா-அத் தலைமையகத்திற்கு நேரடியாகவோ அல்லது உங்கள் இடத்தை சார்ந்த ஜமா-அத் தலைவர் வழியாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

| முகவரி | Address |
|---|---|
| 31 மோர் செல்லிமென்ட் கௌரி சன்குர் | 31, Morcellement Gowreesunkur |
| ரப்பிரே பெப்டிக் மௌரிஷீயஸ் | Petit-Raffray - Mauritius |

அத்தோடு உங்களுக்கு நாங்கள் சமர்ப்பிக்கின்றோம்

1. தூய உறுதிமொழியின்(பை-அத்) நிபந்தனைகள்
   (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) சமர்பித்தது.)
2. பை அத் பட்டிகையின் சிறப்பான விளக்கம்
3. பை அத் ஏற்றுக் கொள்வதற்கான விண்ணப்ப படிவம்

بسم الله الرحمن الرحيم

**IN THE NAME OF ALLAH, THE MOST GRACIOUS, THE EVER MERCIFUL**

# JAMAAT UL SAHIH AL ISLAM

**அளவற்ற அருளாலும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரில்**

**நாங்கள் அவனை புகழுகின்றோம் மதிப்பிற்குரிய தூதர் முஹம்மது (ஸல்)மீது ஸலாத் கூறுகின்றோம்.**

## The Condition of Bai-Ath (Initiation)

**பை-அத் நிபந்தனைகள்**

## (Drafted by Hazrath Mirza Ghulam Ahmad (AS) 1835-1908)

ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமில் சேருபவர் உளப்பூர்வமாக பின் வரும் பத்து விஷயங்களில் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

### ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) (1835-1908) தயாரித்த பை-அத் தின் ஒன்பது நிபந்தனைகளும், காலகட்டத்திற்கு ஏற்றவாறு மாற்றம் ஏற்படுத்தப்பட்ட பத்தாவது நிபந்தனையும்

1. நான் மரணமடைகின்றவரை ஷிர்க் என்னும் இறைவனுக்கு இணை வைப்பதில் இருந்து விலகி நிற்பேன்.
2. பொய், விபச்சாரம், தீயபார்வை, அனைத்து வகைப்பட்ட தீய செயல்கள், வஞ்சனை, பிறருக்குஅநீதி இழைத்தல், ஏமாற்றுதல், குழப்பம் விளைவித்தல், தேச துரோகம் ஆகிய தீமைகளை தவிர்த்துக் கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை அடக்கிக் கொள்வேன்.
3. இறைவனின் கட்டளையின் படியும் அவனுடைய தூதரின் கட்டளையின் படியும் ஐந்து வேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். என்னால் இயன்றவரை தஹஜ்ஜுத் என்னும் நடு இரவுத் தொழுகையை கடைபிடித்துக் கொள்ளவும் முஹமது ரஸீலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது சலாத்து ஓதிக் கொள்தலும் அனுதினம் எனது பாவங்களின் மீட்சிக்காக இறைவனிடம் மன்னிப்பு தேடிக்கொள்தலும் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுப்படுவேன். இறைவனின் அருட்கொடைகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனை தினமும் புகழ்ந்து வருவேன்.
4. உடலளவிலான தீய ஆவேசங்களை கட்டுப்படுத்துவதோடு, எல்லா மக்களுக்கும் குறிப்பாக முஸ்லீம்களுக்கும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ கைகளினாலோ வேறு வகையிலோ எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டேன்.
5. துக்கம் மகிழ்ச்சி, பணக்கஷ்டம் பணவசதி, இறைவனிடமிருந்துக் கிடைக்கும் அருள் அவனால் தரப்படும் வேதனை, (அருள்கட்டம் அபாயகட்டம்) ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எல்லா நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும் இன்னல்களையும் ஏற்க தயாராக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்செல்வேன்.

6. சடங்கு சம்பிரதாயங்களில் இருந்தும் மனதின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதில் இருந்தும் விலகிக் கொள்வேன். திரு குர் ஆனின் எல்லா கட்டளைகளுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு இறைவனின் போதனையின் படியும் அவன் தூதனின் போதனையின் படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்.
7. தற்பெருமையும் அகம்பாவத்தையும் முற்றிலுமாக விட்டு விடுவேன். பணிவாக நடத்தல், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை இவற்றையே கடைபிடித்து வாழ்க்கையை நடத்துவேன்.
8. மார்க்கம் அதன் கண்ணியம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாக கருதுவேன்.
9. இறைவனின் படைப்புகளாகிய எல்லோருக்கும் தொண்டு செய்வதால் எந்த பிரதி பலனையும் எதிர் பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து ஈடுபட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களையும் அருள்களையும் கொண்டு என்னால் முடிந்த வரை மனித குலம் பயன் பெறும் வகையில் பணியாற்றுவேன்.
10. அல்லாஹ்வின் அன்புக்காக இந்நூற்றாண்டின் இறைத்தூதருக்கு(மஸீஹ்) கிடைக்கும் இறை வேண்டுக்கோளுகளின் படி இஸ்லாமின் எல்லா நல்ல விஷயங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களிடம் நான் செய்துக் கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் அதாவது பௌதீகமோ தற்காலிகமோ குடும்ப சம்பந்தமோ சேவக-எஜமான நோக்கங்களிலோ உட்படாத ஒரு சகோதர பந்தத்தை ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம்(அலை)மிடம் வைத்திருப்பேன் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்.

இன்ஷா அல்லாஹ்

بسم الله الرحمن الرحيم

**அளவற்ற அருளாலும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரில்**

**நாங்கள் அவனை புகழுகின்றோம் மதிப்பிற்குரிய தூதர் முஹம்மது (ஸல்)மீது ஸலாத் கூறுகின்றோம்.**

# JAMAAT UL SAHIH AL ISLAM

## ADDITIONAL EXPLANATION ON THE BAI'ATH (INITIATION)

## ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் பை-அத் உடன்படிக்கையின் சிறப்பான விளக்கம்

நமது அன்புக்குரிய தூய தூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்) வும். அல்லாஹ்வின் பால் மானிடக்குலத்தை அழைப்பதற்காக கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அவதரித்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை)மும் ஆற்றிய வேலைகளை தொடர்ந்து நடத்தி செல்வதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் என்னை நியமித்திருப்பதாக அவன் (அல்லாஹ்) என்னை தெரியப்படுத்தியிருக்கின்றான். இந்நூற்றாண்டின் முஜத்தீதாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும் கலீ.்.பத்துல்லாஹ் ஆகவும் அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்திருக்கின்றான். இந்த நற்செய்தியை அவனே என்னை அறிவித்துள்ளான்.

உண்மையை தேடுகின்ற ஏதொரு முஸ்லீமும், அல்லாஹ்வுடன் உண்மையான ஒரு நட்பை உருவாக்கிட விரும்புகின்ற ஒவ்வொரு நபரும், நம்பிக்கையின் பரமானந்தத்தை அருந்த ஆசைப்படும் ஒவ்வொருவரும், அல்லாஹ்வின் வழியில் பரிபூரணமாக பயணம் செய்ய உள்ளப்பூர்வமாக வெம்புகின்ற ஒவ்வொரு மனமும் அல்லாஹ்வின் இந்த எளிய அடியானுடன் ஒரு தூய உடன்படிக்கையில் ஏற்பட்டுக் கொள்ள வேண்டும். இந்த செயல் வழியினை(உடன்படிக்கை) விரும்புகின்றவர்களை நிச்சயமாக அல்லாஹ் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் பால் வழி நடத்த செய்வான். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருளால் நான் அவர்களுக்காக பிரார்த்தனை செய்வேன். **அவர்கள் ஈடுபட்டிருக்கும் இந்த உறுதிமொழியின் நிபந்தனைகளின் படி வாழ்ந்து கொண்டால் அல்லாஹ்வின் உதவியால் அவர்களின் சுமைகள் யாவும் குறைந்து விடும்.**

கவனித்துக் கொள்ளுங்கள் - பை அத் என்பது ஒரு ஆன்மீக உடன்படிக்கையாகும். அதாவது ஒரு நல்லொழுக்க உறுதிமொழியாகும். இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹீம் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளருமான நபரும், புதிதாக பை அத் செய்கின்ற நபரும் ஒன்றுக்கொன்று ஏற்படும் ஒரு நல்லொழுக்க உடன்படிக்கை. நேர்வழியைக் குறித்த (Sirathal Musthaqueem) புனித குர்ஆனின் நல்லொழுக்க போதனைகளும் நமது அன்புக்குரிய தூய தூதர் முஹமது (ஸல்) வும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை)மும் தந்த போதனைகளின் அடிப்படையிலான உண்மையான பாதையில் அல்லாஹ்விற்காக பயணம் செய்ய இந்த பை-அத் வழியாக அவனை(பை-அத் செய்யும் நபரின் இஸ்லாஹிற்காக) கலீ.்.பத்துல்லாஹ் அழைக்கின்றார். 'இஸ்லாஹ்' என்றால் நல்லொழுக்கவும் ஆன்மீகவுமான சரி செய்தல் ஆகும். அல்லாஹ்வின் இந்த எளிய அடியானின் போதனைகள் வழியாகவும் மார்க்க வேண்டுகோள் மூலமாகவும் நமது குற்றக்குறைவுகளை மாய்த்துக் கொள்ளவும் நமது இயல்பை தூய்மைப்படுத்தவும் அவர் அழைக்கின்றார்.

**நீங்கள் இப்பாதையில் நேர்மையுள்ளவர்களாக இருந்தால் அல்லாஹ்விடமிருந்து போதனங்களும் பிரகாசங்களும் உங்களுக்கு கிடைக்கும். நம்பிக்கையாளர்களின் இதயத்தை அது ஒளிபூரணமாக்கும். உண்மை பாதையின் பால் பயணம் புரிய தேவையான மார்க்கதரிசனவும் அது வழி கிடைக்கும். இந்த நேர் பாதைக்காக அனுதினம் கீழ் காணும் துவாக்கள் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.**

1. அல்லாஹ்வே எனது பாவங்களை அனைத்தும் நீ மன்னிப்பாயாக. எனது இயல்பை நீ தூய்மைப்படுத்துவாயாக. உனது விருப்பத்திற்கு ஏற்ப உணவை நீ வழங்குவாயாக. அனுதினம் கிடைப்பதால் மட்டும் திருப்தியுள்ளவனாக வாழக்கூடிய திறமை நீ தருவாயாக. என்னில் இருந்து நீக்கம் செய்த என் சொந்த விருப்பங்களின் பால் திரும்ப செல்ல இயலாத அளவிற்கு எனது உள்ளத்தை சுத்தப்படுத்துவாயாக. அல்லாஹ்வே நீ எனது பட்சாதாபத்தை ஏற்றுக் கொள்வாயாக. எனது பாவங்களை அனைத்தும் நீக்கம் செய்வாயாக. எனது பிரார்த்தனைகளுக்கு நீ பதிலளிப்பாயாக. எனது நம்பிக்கையை சக்திப்படுத்துவாயாக. எனது வார்த்தைகளை நேர்மையாக்குவாயாக. உண்மையின் பால் எனது மனதை வழி நடத்துவாயாக. எனது உள்கோபங்களை நீ அகற்ற செய்வாயாக.
2. அல்லாஹ்வே எங்களை மன்னிப்பாயாக. எங்களோடு அன்பு காட்டுவாயாக. எங்களுடைய எல்லா நற்செயல்களையும் நீ ஏற்றுக் கொள்வாயாக. அல்லாஹ்வே நீ எங்களுக்கு சொர்க்கம் தந்தருளுவாயாக. நரக அக்கினியில் இருந்து எங்களை பாதுகாப்பாயாக. எங்களுடைய வாழ்க்கையை வெளிப்படையான வேஷத்தில் இருந்து இரட்சிப்பாயாக.
3. அல்லாஹ்வே திட நம்பிக்கை தந்தருளிட நான் மன்றாடுகின்றேன். உண்மை வழியை பின் தொடர்ந்து செல்ல ஆற்றல் வழங்குவாயாக. நீ வழங்கியதில் பெருமை கொள்வதற்கான சக்தி தருவாயாக. உன்னை மட்டும் வணங்குவதற்கான மனநிலை தந்தருளுவாயாக. உண்மை மட்டும் கூறுவதாக எனது நாவை ஆக்குவாயாக. எனது உள்ளத்தை ஆரோக்கியமுள்ளதாக மாற்றுவாயாக. எல்லா தீய விஷயங்களில் இருந்து நீ என்னை பாதுகாப்பாயாக. எனது இயல்பை சுத்தப்படுத்துவாயாக. நிச்சயமாக உனது அறிவில் இருந்து எதுவும் அப்பாற்பட்டதல்ல.
4. அல்லாஹ்வே உன்னை அஞ்சி வாழக் கூடிய ஆற்றல் எனக்கு வழங்குவாயாக. எங்களதும், எங்களது பாவங்களுக்கும் மத்தியில் நீ ஒரு கேடயமாக இருப்பாயாக. சொர்க்கத்தில் நுழைந்து விட ஏற்றவாறு கட்டுப்பட்டு செயல்பட எங்களுக்கு வழி வகுப்பாயாக. அபாயங்களை ஐய்யமின்றி எதிர் கொள்வதற்கான சக்தியும் நம்பிக்கையும் நீ எங்களுக்கு தந்தருளுவாயாக. எங்கள் கண்களையும் காதுகளையும் நீ பாதுகாப்பாயாக. எங்களது வாழ்க்கை முழுவதும் எங்களுக்கு உதவியளிக்கின்ற உடலளவிலான பொறுமை எங்களுக்கு வழங்குவாயாக. இந்த தற்காலிகமானவாழ்க்கை, வாழ்க்கையின் இறுதியல்ல என்ற நம்பிக்கையின் பால் எங்களை உறுதிப்படுத்துவாயாக. எங்களுடைய அறிவு அற்பமானதாகும் இறவை!
5. அல்லாஹ்வே நாங்கள் பின்னோக்கம் செல்லாத நிலையிலான சக்தி தந்தருளுவாயாக. எங்களுடைய நம்பிக்கையை வலுப்படுத்துவாயாக.
6. அல்லாஹ்வே எனக்கு தூய்மையான இயல்பை தருவாயாக. இறை பக்தியும் எளிமையும் எனக்கு வழங்குவாயாக எவருடையவும் உதவியின்றி வாழ வழிகாட்டுவாயாக.
7. அல்லாஹ்வே எனது ஒரே ஒரு லட்சியம் நீயும் உனது திருப்தியும் மட்டுமே எனது பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வாயாக இறைவா.

**ஹஸ்ரத் கலீ:பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)**

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم

# JAMAAT UL SAHIH AL ISLAM

**ஜமாஅத்து சஹீஹில் இஸ்லாம்**

## FORM OF INITIATION

**பை-அத் ஏற்றுக் கொள்வதற்கான விண்ணப்ப படிவம்**

மதிப்புக்குரிய ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் அவர்களுக்கு

السلام عليكم ورحمة الله وبركاته

இஸ்லாமின் அடிப்படை நம்பிக்கையும் முஸ்லீம்களுடைய பொதுவான கடமைகளும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் விளக்கி தந்த பை-அத்தின் நிபந்தனைகளும் அதைத் தொடர்ந்து ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் முஹைத்தீன் கலீ∴பத்துல்லாஹ் அல்-மஸீஹ் ஆகிய முனீர் அஹமது அஸீம் அவர்கள் தந்திருக்கின்ற சிறப்பான விளக்கங்களும் படித்து புரிந்து கொண்டு அதை பரிபூரணமாக ஒத்துக் கொள்ளவும் செய்கின்றேன்.

கலீ∴பத்துல்லாஹ்வின் உண்மையான தோழர்களில் ஒருவராக இருக்க எனக்காக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டிக் கொள்கின்றேன். அவ்வாறேயானால் அல்லாஹ் என்னை ஏற்றுக் கொள்வான் என்றும் அல்லாஹ்வை அடைவதற்கான வழி உங்கள் வழியாக கிடைத்து விடும் என்றும் அது மூலமாக நான் நேர்மையாளர்களின் உட்பட்டு விடுவேன் என்றும் எண்ணுகின்றேன்.

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله
أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله

**‘வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி மற்றாருமில்லை. அவன் ஏகனும் இணையற்றவனும் ஆவான் என்று நான் சாட்சி அளிக்கிறேன். முஹமது நபி நிச்சயமாக அவனது தூதனும் அடியானும் ஆவான் என்றும் நான் உறுதியளிக்கிறேன்’**

இந்த விண்ணப்ப படிவத்தின் கீழ் கையொப்பம் செய்திருக்கும் நான் ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) மின் கையில் பை-அத் செய்து ஜமாஅத் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர் ஆகின்றேன்.

ஹஸ்ரத் முஹமது நபி (ஸல்) அவர்கள் “காத்தமுன் நபியீன்” என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன், கூறுகின்றேன். அவ்வாறே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் அன்னாரின் காலக் கட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹீம் இமாம் மஹ்தியும் என்று நான் நம்புகின்றேன். அதைப் போன்றே இந்த நூற்றாண்டில் (15-ம் நூற்றாண்டில்) அல்லாஹ் நியமித்த கலீ∴பத்துல்லாவும் மஸீஹீம் நபியும் ஆவார், ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) என்றும் நான் நம்புகின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன்.

- ❖ எனது எல்லா விதமான தவறுகளையும் மன்னிப்பதற்கு நான் அல்லாஹ்விடம் மன்றாடிக் கொள்கிறேன். வருங்காலங்களில் எல்லா விதமான தவறுகளின் இருந்தும் என்னை பாதுகாப்பதற்கு நான் முற்றிலும் முயற்சிப்பேன்.
- ❖ நான் ஒரு பொழுதும் அல்லாஹ்வுக்கு இணை வைக்க மாட்டேன். உலக விஷயங்களைவிட தீனுல் இஸ்லாமிற்கு முதல் இடம் வழங்குவேன்.
- ❖ இஸ்லாமின் எல்லா கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு வாழ முற்றிலும் முயற்சிப்பேன். குர் ஆன் போதனைகள், ஹதீஸ் பாடங்கள், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) வின் வாழ்க்கை வரலாறு, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)மின் நூல்கள் இவைஅனைத்தும் என்னால் இயன்ற வரையில் படித்துக் கொண்டே இருப்பேன்.
- ❖ இந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளரும் கலீ∴பத்துல்லாஹ்வும் இறைத் தூதரும் ஆகிய ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை)மின் அனைத்து வாதங்களையும் நான் ஒத்துக் கொள்கின்றேன்.
- ❖ இஸ்லாமை பிரச்சாரம் செய்வது எனது வாழ்வில் முதல் கடமையாக நான் உணர்ந்து கொள்கின்றேன். எல்லா நல்ல விஷயங்களுக்கும் நான் உங்களுக்கு கட்டுப்படுவேன். இறைவெளிப்பாடுகள் மூலம் இஸ்லாமில் வந்துக் கொண்டிருக்கின்ற அனைத்து நல்ல செய்தியும் அது இந்த நூற்றாண்டில் உங்கள் வழியாக வெளிப்படும் என்றும் அது வாயிலாக இஸ்லாமின் உண்மை யினை மனித உள்ளங்களில் எட்டச் செய்யவும் முடிகின்றது என்ற உண்மையையும் நான் ஒத்துக் கொள்கின்றேன்.

أستغفر الله ربي من كل ذنب وأتوب إليه. أستغفر الله ربي من كل ذنب وأتوب إليه.
أستغفر الله ربي من كل ذنب وأتوب إليه

என்னை படைத்த அல்லாஹ்விடத்தில் எனது எல்லா பாவங்களில் இருந்து பாதுகாவலை தேடுகின்றேன். நான் அவனிடத்தில் பாவ மன்னிப்பு கூறி திரும்புகின்றேன்.

رب إني ظلمت نفسي واعترفت بذنبي فاغفر لي ذنوبي فإنه لا يغفر الذنوب إلا أنت

எனது இறைவா நான் எனது ஆன்மாவிடத்தில் அநீதி இழைத்துள்ளேன். நான் எனது தவறுகளை ஏற்றுக் கூறுகின்றேன். மன்னிப்பாயாக இறைவா. தவறுகளை மன்னிப்பது நீ அல்லாமல் வேறு எவருமில்லை.

## FORM OF INITIATION/ பை-அத் ஏற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

## JAMAAT UL SAHIH AL ISLAM/ ஜமாஅத்து சஹீஹில் இஸ்லாம்

**SURNAME/** குடும்ப பெயர்:………………………….. **NAME/** பெயர்:……………………

**ADDRESS/** முகவரி :………………………………………………………………………..…

………………………………………………………………………………………………

**CITY/** நகரம் :……………………………

**TELEPHONE/** தொலைபேசி எண் : …………………….

**COUNTRY/** நாடு : ……………………………….

**MEMBERS OF THE FAMILY/** குடும்ப உறுப்பினர் :

| | SEX/ பாலினம் M/F/ஆண் /பெண் | | SEX/ பாலினம் M/F/ஆண் /பெண் |
|---|---|---|---|
| 1……………………………………………… | | 11……………………………………… | |
| 2……………………………………………… | | 12……………………………………… | |
| 3……………………………………………… | | 13……………………………………… | |
| 4……………………………………………… | | 14……………………………………… | |
| 5……………………………………………… | | 15……………………………………… | |
| 6……………………………………………… | | 16……………………………………… | |
| 7……………………………………………… | | 17……………………………………… | |
| 8……………………………………………… | | 18……………………………………… | |
| 9……………………………………………… | | 19……………………………………… | |
| 10……………………………………………… | | 20……………………………………… | |

**Signature/**கையொப்பம்

**Date of Initiation/**

பை-அத் ஏற்றுக்கொண்ட தேதி:

**Head of the Family/** குடும்ப தலைவர் :

**Signature/**கையொப்பம் :

**President of the Jamaat Ul Sahih Al Islam/**
தலைவர் ஜமாஅத் சஹீஹில் இஸ்லாம் :

**Date/** தேதி: …………………………..